 දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA
තැ.පෙ.43/தபால் பெட்டி 43 /P.O.Box 43
පරණ ගලහ පාර, පේරාදෙණිය, ශ්‍රී ලංකාව
பழைய கலகா வீதி, பேராதனை, இலங்கை
Old Galaha Road, Peradeniya, Sri Lanka

මගේ අංකය:
எமது இலக்கம்:
My Ref:

ඔබේ අංකය:
உமது இலக்கம்:
Your Ref:

31.03.2026

தொடர் தொலைக்கல்வி நிலைய வெளிவாரி பட்டதாரிகளின் கவனத்திற்கு,

**அன்பார்ந்த பட்டதாரிகளே,**

**பட்டமளிப்பு விழா (வெளிவாரி) – 2024 / 2025**

1) கலைமாணி (BA) (வெளிவாரி) பழைய பாடத்திட்ட பரீட்சையில் தோற்றி சித்தி அடைந்த பரீட்சார்த்திகள் மற்றும் கலைமாணி (BA) (வெளிவாரி) புதிய பாடத்திட்டத்தில் சித்தி அடைந்த பரீட்சார்த்திகள் மற்றும் வியாபார நிர்வாகமாணிப் பரீட்சையில் (BBA) (வெளிவாரி) தோற்றி சித்தி அடைந்த பரீட்சார்த்திகளுக்கான பட்டமளிப்பு விழா, **2026 ஜூன் மாதம் 02ம் திகதி பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தில் மஹிந்த ராஜபக்ஷ மண்டபத்தில்** நடைபெறவுள்ளது.

2) இப்பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்குத் தகுதி பெற்ற உங்களது விபரங்களானது CDCE இணையதளத்தில் பதிவேற்றம் (Upload) செய்யப்பட்டுள்ள விண்ணப்படிவத்தில் உள்ளடங்கியுள்ளது. அவ்விண்ணப்தைப் பதிவிறக்கம் (Download) செய்து விடயங்களைப் பூர்த்திசெய்து ***(விண்ணப்பத்தில் இல. 6 இன் கீழ் தற்போது நீங்கள் பயன்படுத்தும் சேவையிலுள்ள தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் (e-mai)l முகவரியொன்றினைக் குறிப்பிடல் கட்டாயமானதாகும்.)*** கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் ***'CONVOCATION' (EXTERNAL) – 2024/2025*** எனக் குறிப்பிட்டு, ***Senior Assistant Registrar, Centre for Distance and Continuing Education, No. 43, Old Galaha Road, Peradeniya.*** என்ற முகவரிக்கு ***27-04-2026*** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும். (அத்துடன் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து அச்சிடும்போது A4 தாளின் இரு பக்கங்களிலும் அச்சிடவும்.)
**Link: https://cdce.pdn.ac.lk/tools/convo**

3) பட்டச் சான்றிதழுக்கான கட்டணம், பட்டமளிப்பு விழாவிற்கான கட்டணம் உள்ளடங்கலாக பட்டதாரிகள் செலுத்தவேண்டிய மொத்தக் கட்டணம் **ரூபா. 10,000/- ஆகும். இக்கட்டணத்தை பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளும் / கலந்துகொள்ளாத பட்டதாரிகள் அனைவரும் செலுத்துதல் வேண்டும்.** இக்கட்டணத்தை பேராதனைப் பல்கலைக்கழக தொடர் தொலைக்கல்வி நிலைய கணக்கிலக்கம் 057–1–001–4–1338036 ற்கு, மக்கள் வங்கி கிளையில் செலுத்தி, பெற்றுக்கொண்ட வங்கிச்சீட்டின் மூலப்பிரதியை ***(Original Cash Deposit Slip)*** விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் கட்டாயமாகும். (புகைப்படத்திற்கான கட்டணம் இதில் சேர்க்கப்படவில்லை என்பதைக் கருத்திற்கொள்க.)

❖ எதிர்காலத்தில் பட்டமளிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அறிவித்தல்கள் எமது CDCE இணையதளம் மூலமாகவே (https://cdce.pdn.ac.lk/) அறிவிக்கப்படும். மற்றும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உமது தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியினூடாக உங்களுக்கான தகவல்கள் அறிவிக்கப்படும். அதனால் உங்களது தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மாற்றாதிருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். பட்டமளிப்புவிழா தொடர்பான வேண்டுகோல்கள் மற்றும் விபரங்களை cdceconvocation@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஜே.பி.வெஸ்லி
சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
தொடர்தொலைக்கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்.

Senior Assistant Registrar
Centre for Distance & Continuing Education
University of Peradeniya